# ஆட்டோ மொபைல் இன்ஜினியரிங் துறையின் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் அதை சார்ந்த வேலைவாய்ப்புகள் பற்றிய கருத்தரங்கம் கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

ஆட்டோ மொபைல் இன்ஜினியரிங் துறையின் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் அதை சார்ந்த வேலைவாய்ப்புகள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் தி காவிரி காலேஜ் ஆப் இன்ஜினியரிங் கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கின் சிறப்பு விருந்தினராக பொறியாளர் செல்வகுமார், மேலாளர், தமிழ்நாடு போக்குவரத்து கழகம், சேலம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஆட்டோ மொபைல் துறையின் தலைவர் அருள்ஆனந்த் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

கருத்தரங்கிற்கு வருகைதந்திருந்த சிறப்பு அழைப்பாளர் அவர்களுக்கு தி காவிரி கல்வி நிறுவனத்தின் செயலாளர் பேராசிரியர் இளங்கோவன் அவர்கள் பொன்னாடை அணிவித்தும், நினைவு பரிசு வழங்கியும் கவுரவித்தார்.

தி காவிரி பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் துரைசாமி, டீன் ஓபுலி, மற்றும் இயந்திரவியல் துறை தலைவர் பெஞ்சமின் லாசரஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

தி காவிரி கல்வி நிறுவனத்தின் செயலாளர் பேராசிரியர் இளங்கோவன் அவர்கள் தன் முதன்மையுரையில் மாணவர்கள் புதிய தொழில்நுட்பங்கள் பற்றி அறிந்து கொள்ள முன்வர வேண்டும் எனவும் வரும் காலங்களில் கார் உற்பத்தியில் உருவாகும் மாபெரும் மாற்றங்களான பேட்டரி கார்களின் பயன்பாடு, சுற்றுசூழல் பாதிப்பை ஏற்படுத்தாத கார்கள் தயாரிப்பு மற்றும் வேளாண் துறை சார்ந்த நவீன தொழில்நுட்பங்களை கண்டுபிடிக்க மாணவர்கள் முன்வர வேண்டும் என மாணவர்களை கேட்டுக்கொண்டார்.

சிறப்பு விருந்தினர் திரு செல்வகுமார், மேலாளர், தமிழ்நாடு போக்குவரத்து கழகம், சேலம் அவர்கள் தன் உரையில் தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் பணியாற்ற, பொறியியல் பயின்றவர்களின் வேலை வாய்ப்புகள், கனரக வாகனங்களில் ஏற்பட போகும் மாற்றங்கள் பற்றியும் பகிர்ந்து கொண்டார்.

நன்றியுரையை உதவி பேராசிரியர் கார்த்திக்கேயன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தி காவிரி கல்வி நிறுவனங்களின் கௌரவ தலைவர் முனைவர் நடேசன், தலைவர் அன்பழகன், துணை தலைவர் மதன்கார்த்திக்,

தாளாளர் இராமநாதன், ஒருங்கிணைப்பாளர் ரேவதி இளங்கோவன், செயல் இயக்குநர் கருப்பண்ணன், மற்றும், உதவி பேராசிரியர்கள் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்சியை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை உதவி பேராசிரியர் சங்கர் அவர்கள் செய்திருந்தார்.